விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 065 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 10 சனிக்கிழமை (22.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### தையிட்டி விகாரை விவகாரம்
## ஊடகவியலாளர்களிடம் 6 மணி நேர விசாரணை

(யாழ்ப்பாணம்)

"தையிட்டி விகாரையை இடிக்க வாரீர்" என முகநூலில் பகிரப்பட்ட பதிவு தொடர்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்களிடம் பலாலிப் பொலிஸார் சுமார் 6 மணி நேரம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர்.

"தையிட்டி விகா 15

### தொழில் வாய்ப்புகளை
## வடக்கில் உருவாக்குதல் தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

வட மாகாணத்தில் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் திட்டம் 16

### காங்கேசன்துறை – நாகப்பட்டினம்
## கப்பல் சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஒத்திவைக்கப்பட்டிருந்த காங்கேசன்துறை - நாகப்பட்டினம் கப்பல்சேவை இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கப்பல் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இன்று காலை 7.30 மணியளவில் நாகப்பட்டினத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் கப்பலானது காங்கேசன்துறையை வந்தடைந்த பின்னர் மீண்டும் பி.ப 1.30 மணியளவில் காங் 15

### தேர்தல் வாக்குறுதிகள் பட்ஜெட்டில் இல்லை
# அநுரவின் அரசாங்கம் மக்களை ஏமாற்றியுள்ளது
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் கால வாக்குறுதிகளுக்கு அமைய பாதீடு முன்வைக்கப்படவில்லை. அநுர அரசாங்கம் மக்களை ஏமாற்றியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் குற்றஞ் சாட்டியுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



## அதானியைவிட குறைந்த விலையில் நிறுவனமொன்று ஒப்பந்தம்

(கொழும்பு)

அதானியை விட குறைந்த விலையில் மின்சாரம் வழங்க மற் 15

## தனிமையில் வாழ்ந்தவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

தனிமையில் வாழ்ந்த வயோதிபப் பெண் ஒருவர் உடலில் தோள்கள் உரிந்த நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கீரிமலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சிவராஜா 15

### நீர்வேலிச் சந்தைக்கு
## வாழைக்குலை ஏற்றிச் சென்றவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிச் சந்தைக்கு வாழைக்குலை ஏற்றிச் சென்ற வியாபாரி ஒருவர் வீதியில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த நல்லையா சிவலோகநாதன் (வயது-64) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

வீட்டில் இருந்து நேற்றுக் காலை 6.00 மணியளவில் துவிச்சக்கர 15

### உரிய நேரம் வரும்போது
## அரசியலமைப்பு பற்றிப் பேசுவோம்
### தமிழரசுக் கட்சி முன்னணிக்கு பதில் கடிதம்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் கூட்டாகச் செயற்படுவது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்த அழைப்பிற்கு உரிய நேரம் வரும்போது இந்த விடயம் பற்றி நாம் கலந்துரையாடலாம் என இலங்கைத் தமிழரசுக் கட்சி பதிலளித்துள்ளது.

தமிழரசின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை முன்னணியின் 16

### பட்ஜெட்டில் வடக்குக்கு ஒதுக்கப்பட்ட நிதி
## யாழில் மட்டும் முடங்காமல் வன்னிக்கும் வரவேண்டும்
### சபையில் செல்வம் அடைக்கலநாதன்



(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி, யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் வன்னிக்கும்வரவேண்டும்என ஜனநாய 15

## மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் உயிரிழப்பு
### ஆறுகால்மடத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த விக்னேஸ்வரன் வினோஜன் (வயது-19) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை முழுவதும்

# 25 இலட்சம் தென்னங்கன்றுகளை பயிரிடுவதற்கு அரசு திட்டம்

இலங்கை முழுவதும் 25 இலட்சம் தென்னங்கன்றுகளைப் பயிரிடும் திட்டத்தைத் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

தேங்காய் பற்றாக்குறையைக் கருத்திற் கொண்டு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் ஆரம்ப நிகழ்ச்சி கடந்த 17 ஆம் திகதி கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி, வடக்கு தென்னை முக்கோண வலயத்தில் சுமார் ஒரு மில்லியன் தென்னங் கன்றுகளை நடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## சஞ்சீவ படுகொலை

# பிரதான சந்தேக நபரின் காதலி பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் சஞ்சீவ குமார சமரரத்னே எனப்படும் "கணேமுல்ல சஞ்சீவவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரின் காதலி கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹரகமப் பகுதியில் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்றிரவு பொலிஸாரினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவர் மேலதிக விசாரணைக்காக, கொழும்பு குற்றப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

"கணேமுல்ல சஞ்சீவவை கொலை செய்த பின்னர் நாட்டை விட்டு தப்பிச் செல்ல திட்டமிட்டிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நாட்டை விட்டு தப்பிச் செல்லும் நோக்கில் குறித்த பெண்ணை நீர்கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்காக சென்ற வேளையில், சுற்றி வளைத்த பொலிஸார் அவரை கைது செய்திருந்தனர்.

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் கயங்க மாரப்பனவின் அறிவுறுத்தலின் பேரில் இந்தக் கைதுகள் இடம் பெற்றுள்ளன. (ம-7)

# அர்ச்சுனா எம்.பிக்கு எதிரான முறைப்பாடுகள்

## ஆராய மூவரடங்கிய குழு நியமனம்

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பாராளுமன்ற வரப்பிரசாதங்கள் பற்றிய குழுவுக்கு அனுப்படும் என சபாநாயகர் அறிவித்துள்ளார்.


பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா குறித்து தமக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக மூவரடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்று சபையில் அறிவித்தார்.

அதன்படி, குழுக்களின் பிரதி தலைவர் ஹேமாலி வீரசேகர தலைமையிலான இந்த குழுவில் விஜித ஹேரத் மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் அடங்குகின்றனர்.

இதன்படி, குறித்த குழுவின் அறிக்கை நாடாளுமன்ற வரப்பிரசாதங்கள் பற்றிய குழுவுக்கு அனுப்பப்படும் என சபாநாயகர் அறிவித்தார்.(ம-7)

## ஐக்கிய நாடுகள் சபையின்

# சமுத்திர ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்து



தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளின் கடல் உயிரியல் பன்முகத் தன்மையின் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சமுத்திர ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. 2025 பெப்ரவரி 20ம் திகதியன்று நியூயோர்க்கில் அமையப் பெற்றுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் கடல் பல்லுயிரினங்களின் பெருக்கம் தொடர்பில் அரசுகளுக்கிடையில் இடம்பெற்ற மாநாட்டின் போது இந்த ஒப்பந்தம் கடந்த 2023ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

அத்துடன் ஐக்கிய நாடுகளின் சமுத்திர சட்டத்தின் மாநாட்டின் (UNCLOS) கீழ் இது செயற்படுத்தப்பட்டுள்ளது.17 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதுடன், 109வது நாடாக இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையடுத்து, ஒப்பந்த அங்கீகரிப்பு மற்றும் ஒப்பந்த விதிகள் நிறைவேற்றப்படுவதை கண்காணிப்பதற்காக இலங்கை அரசாங்கம் அமைச்சர்களின் பங்கேற்புடன் கூடிய குழுவை அமைக்கும். முன்கூட்டிய அங்கீகாரத்தை நோக்கமாகக் கொண்டு உள்நாட்டு சட்ட வரைபை மேம்படுத்துவதற்கு சர்வதேசத்தின் உதவியுடன் சட்டத்தைத் தயாரித்து ஒருங்கிணைப்பதே குழுவின் எதிர்பார்ப்பாகும்.

BBNJ ஒப்பந்தத்தில் இணைவதன் மூலம் சமுத்திர பாதுகாப்பு குறித்தான நாட்டின் முயற்சிகளின் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் அறிவுப்பகிர்வு என்பவற்றில் இலங்கையின் திறனை முன்னேற்றமடையச் செய்ய முடியும். அத்துடன் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளமையானது ஐக்கிய நாடுகளின் சமுத்திர சட்டம் தொடர்பிலான மாநாட்டிற்கு (UNCLOS) இலங்கையின் தொடர் அர்ப்பணிப்பு மற்றும் பலதரப்பட்ட ஒத்துழைப்பு மூலம் சமுத்திர நிர்வாகத்தை உறுதி செய்வதை வலியுறுத்துகிறது. (ம-7)

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 02 - 1952



மறைவு 20 - 02 - 2025

## திருமதி சத்தியதேவி சிவஞானம்

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்.உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியதேவி சிவஞானம் அவர்கள் 20.02.2025 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் சௌந்தரம் தம்பதியரின் பாசமிகு புதல்வியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - வியாகம்மா தம்பதியரின் மருமகளும் சிவஞானம் அவர்களின் மனைவியும் சிவசங்கர் (கனடா), சத்தியரூபி (சுவிஸ்), ரமணிசங்கர் (கனடா), நிரஞ்சனரூபி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவரஞ்சினி (கனடா), நகுலேஸ்வரன் (சுவிஸ்), நிறோஜினி (கனடா), விக்கினேஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் முருகதாசன், நடராஜா, சுபத்திரா, சுந்தரதாசன், சிவதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காந்திதேவி, இராசமலர், காலஞ்சென்ற சிவஞானலிங்கம், இந்திராபிரியதர்சினி, குகனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் தீபிகா, சர்வினி, ஆர்த்தி, நவீன், கிருஸ்ணவி, ஆராதனா, மிதுசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் (கோப்பாய் வீதி, உரும்பிராய்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மகன்
சங்கர் (கனடா, மகன்) - 0014 1641 70627
ரூபி (சுவிஸ், மகள்) - 0041 7893 04837
ரமணி (கனடா, மகன்) - 0016 4796 10624
நிரஞ்சி (இலங்கை, [illegible]) - 07[illegible]
விக்கி (இலங்கை, ம[illegible]) - 076 944 3367

கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

(3477)


# வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு தகைமை அல்லது விருப்பம் உடையவர்கள் தேவை.

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்


ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்

தொடர்பு : 077 729 2840

(C-2311)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 27.11.1955

மறைவு 20.02.2025

எமது பிரதேச செயலகத்தில் J/414 புலோலி தெற்கு கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி.விஜிதா சுதர்சன் அவர்களுடைய அன்புத் தந்தையார்

அமரர்

## வேலன் குமரன்

அவர்கள் 20.02.2025 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்.... பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-2310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களின் நிலை அறிந்து விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வு

## ஜனாதிபதி அநுர உறுதி

(கொழும்பு)

**வடக்கு மக்களின் உண்மை நிலையினை அறிந்து விகாரைகள் அமைக்கப்பட்டமை தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

பத்தாவது பாராளுமன்றத்தின் பாதுகாப்பு அமைச்சு சார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள சில வழிபாட்டு ஸ்தலங்களை அடிப்படையாகக் கொண்டு இன மற்றும் மத ரீதியான பிளவுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதன்போது, கருத்து வெளியிட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, குறுகிய அரசியல் இலாபம் தேடும் குழுவினர் இதுபோன்ற சம்பவங்களை அரசியல் முரண்பாடுகளாக்குகின்றனர்.

இதுபோன்று குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனவாதம், மதவாதத்தைத் தூண்டுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது எனத் தெரிவித்தார்



மதவாதம் மற்றும் இனவாதம் என்பன அரசியலில் இருந்து முற்றாக நீக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8)

# எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்த அமெரிக்க தூதுவர்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் சுமார் ஒரு மணித்தியாலம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# எம்.பிக்களின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புத் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, பதில் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன நேற்று பாராளுமன்றத்தில் இதனைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பாதுகாப்புக் குறித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சபாநாயகரிடம் பலமுறை விடுத்த கோரிக்கைகளை பரிசீலித்த பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சபாநாயகர் இதன்போது தெரிவித்தார். (நி-8)

# வடக்கிலுள்ள சிறந்த வீரர்கள் தேசிய அணிகளில் உள்வாங்கப்பட வேண்டும்

## ஜெகதீஸ்வரன் எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

வடமாகாணத்தில் உள்ள திறமை மிக்க வீரர்களை தேசிய மட்ட அணிகளில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சுக்கான உப குழுக் கூட்டம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம் பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப் பொருள் பாவனையிலும் சமூக வலைத்தளங்களிலும் வீண் பொழுதைக் கழிக்கும் இளைஞர், யுவதிகளின் கவனத்தை நல்ல வழியில் கொண்டு வர விளையாட்டுத்துறை உதவுகிறது.

அதனை ஊக்குவிக்க வேண்டும். ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கிற்கு தேவையான ஆளணி, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ஏனைய தேவைகள் தொடர்பில்கவனம்செலுத்த வேண்டும்.

எமதுபிரதேசத்தில் காணப்படும் விளையாட்டு கழகங்கள் தொடர்பாகச் சிறந்த அவதானத்தைச் செலுத்த வேண்டும் எனவும் வடமாகாணத்தில் உள்ள திறமைமிக்க வீரர்களை தேசிய மட்ட அணிகளில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (நி-8)

## புதுக்கடை துப்பாக்கிச் சூடு விவகாரம்

# கொலையாளியை ஹீரோவாக மாற்றியதற்கு சபையில் கண்டனங்கள் முன்வைப்பு

(கொழும்பு)

டுபாயில் இருந்து வந்த ரகசிய தகவலின் காரணமாகவே கணேமுல்ல சஞ்சீவ கொலையின் பிரதான சந்தேகநபர் சில மணி நேரங்களுக்குள் பிடிபட்டதாகவும் அது பொலிஸாரின் திறமையால் அல்ல எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்தோடு, துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் படங்களைப் பகிர அனுமதிக்க வேண்டாம் என்றும் அவற்றில் குற்றவாளி அதிகாரிகளுடன் அன்பாக நடந்துகொள்வது போல் தெரிகின்றதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இதேவேளை, புகைப்படங்களை வெளியிட்டு கொலையில் தொடர்புடைய துப்பாக்கிச் சூட்டை நடத்தியவரை ஒரு ஹீரோவாக மாற்றியதற்காக அதிகாரிகளுக்கு கடுமையான விமர்சனங்களையும் அவர் முன்வைத்தார்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில், விசாரணை நடத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க பொதுப் பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, அதற்கு பதில் அளித்த பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பான சில படங்கள் செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்தி கையாளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மேலும் பாராளுமன்றத்தில் இதுபோன்ற விடயங்களை முன்வைப்பதற்கு முன் உண்மைகளைச் சரிபார்க்குமாறும் பாராளுமன்ற உறுப்பினர்களை அவர் கேட்டுக்கொண்டார். (நி-8)

# வேந்தர் பதவியை இராஜினாமா செய்தார்

## கல்லேல்லே சுமனசிறி தேரர்



(கொழும்பு)

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் வேந்தரான கல்லேல்லே சுமனசிறி தேரர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இவர் ரஜரட்ட பல்கலைக் கழகத்தின் வேந்தராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டு, கடந்த 14 ஆம் திகதி நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திகசனத்குமாநாயக்கவிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில் வேந்தராக நியமனம் பெற்று ஒருவாரத்தில் பதவியை இராஜினாமா செய்துள்ளார். (நி-8)

# மித்தெனிய துப்பாக்கிச் சூடு; பொலிஸ் உட்பட மூவர் கைது

(கொழும்பு)

மித்தெனிய-கடேவத்த சந்தியில் தந்தை மற்றும் அவரது இரண்டு பிள்ளைகள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் அடங்குவதாக அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த 18 ஆம் திகதி நடந்த துப்பாக்கிச் சூட்டில் 39 வயது தந்தை, அவரது 6 வயது மகள் மற்றும் 7 வயது மகன் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

டுபாயை தளமாகக்கொண்ட ஒரு குற்றக் கும்பலைச் சேர்ந்த ஒருவரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது விசாரணையில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கில்,ஷமி அசத்தல் இந்தியா அபார வெற்றி



ஐசிசி சம்பியன்ஸ் டிராபி தொடரில் டுபாயில் நேற்று முன்தினம் நடை பெற்ற இரண்டாவது போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் டாஸ் வென்ற பங்களாதேஷ் அணியின் கப்டன் நஜ்முல் ஹொசைன் ஷாண்டா பட்டிங்கைத் தேர்வு செய்தார்.

முதலில் பட்டிங் செய்த பங்களா தேஷ் அணியில் வீரர்கள் முகமது ஷமியின் பந்துவீச்சை எதிர்கொள்ள சிரமப்பட்டனர். 35 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறிய நிலையில், தௌகித் ஹிரிடாய் மற்றும் ஜேக்கர் அலி ஜோடி சேர்ந்தனர். இந்த இணை ஆட்டத்தின் பொறுப்பை உணர்ந்து விளையாடியது.

ஜேக்கர் அலி 114 பந்துகளில் 68 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தௌகித் ஹிரிடாய் 118 பந்துகளில் 100 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் 49.4 ஓவர்களின் முடிவில் பங்களாதேஷ் 228 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

இந்தியா தரப்பில் முகமது ஷமி 5 ஹர்ஷித் ராணா 3 விக்கெட்டு களையும், அக்ஷர் படேல் 2 விக் கெட்டுகளையும் கைப்பற்றினர்.

229 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை விரட்டிப்பிடிக்க களமிறங்கிய இந்திய பட்ஸ்மென்கள் பொறுப்பாக விளையாடினர். இந்திய அணி 46.3 ஓவர்களில் 4 விக் கெட்டுகள் இழப்புக்கு 231 ரன்கள் திரட்டி 6 விக்கெட்டுகள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது.

சிறப்பாக விளையாடிய ஷூப்மன் கில் சதம் அடித்து அசத்தினார். இந்திய கப்டன் ரோஹித் ஷர்மா , விராட் கோலி 22, ஸ்ரேயாஸ் அய்யர் 15 ரன்களுக்கும், அக்சர் படேல் ஆட்டமிழக்க, கே எல் ராகுல் 41 ரன்களுடன் ஆட்டமிழக் காமல் இருந்தார். இந்தியா தனது இரண்டாவது போட்டியில் பாகிஸ் தானை நாளை ஞாயிற்றுக்கிழமை எதிர்கொள்கிறது. (6-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 300 | 400-450 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 165 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1400 | 1200 | 1300 | 1400 |
| தக்காளி | 150 | 120 | 80 | 50 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 250 | 200-250 | 200 |
| கோவா | 350 | 350 | 300 | 280 | 400 |
| கரட் | 800 | 700 | 700 | 600 | 700 |
| பூசணி | 120 | 140 | 150 | 90-100 | 200 |
| புடோல் | 150 | 250 | 200 | 200-240 | 300 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 80-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 200-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 180 | 150 | 180 |
| பாகற்காய் | 450 | 500 | 500 | 400-500 | 500 |
| வெண்டக்காய் | 350 | 400 | 300 | 300-350 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 250 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 400 | 350-400 | 300 |
| லீக்ஸ் | 350 | 400 | 400 | 270 | 400 |
| பீற்றூட் | 200 | 250 | 300 | 180 | 300 |
| கறிமிளகாய் | 1000 | 800 | 600 | 700-800 | 800 |
| முருங்கைக்காய் | -- | 2500 | 2000 | 2000-3000 | 2400 |
| போஞ்சி | 300 | 300 | 400 | 250-300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 250 | 200 | 250 |
| கீரை – 1 பிடி | 100 | 50 | 100 | 60-70 | 120 |
| தேசிக்காய் | 200 | 250 | 200 | 250-300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 220 | 250 | 150-250 | 230-280 |
| இராசவள்ளி | 500 | 500 | 500 | 400-500 | 500 |
| வெங்காயப்பூ | 150 | 150 | 200 | 60-120 | 200 |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 120 | 80 | 100 | 150 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3298

அகீபன்




சுதாமதி




சுகாங்கி




துவாரகன்




இராதயன்




சாரங்கி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
01
*
01
*
1936



இறப்பு
19
*
02
*
2025

## உயர்திரு. செல்லையா பொன்னுசாமி
## (S.P. சாமி)

**ஸ்தாபகர் - தினக்குரல், யாழ்.தினக்குரல்.**

**Founder, Chairman - Northern Central Hospital (pvt) Ltd., Northern Publications (pvt) Ltd., Northern Beach Hotel (pvt) Ltd., S.P. Samy Investment Complex (pvt) Ltd., United Merchant Ltd.**

**முன்னாள் தலைவர் - வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம்,**
**தலைவர் வடகொழும்பு இந்துபரிபாலன சங்கம்,**
**முன்னாள் உபதலைவர் - அகில இலங்கை இந்துமாமன்றம், உபதலைவர் - சேர்பொன்னம்பலம் அருணாச்சலம் நம்பிக்கை நிதியம், முன்னாள் தலைவர் - புறக்கோட்டை வர்த்தகர் சங்கம்.**

வேலணை கிழக்கு, 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் செட்டித்தெருலேன், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பொன்னுசாமி அவர்கள் கடந்த (19.02.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான மருதையா - பாக்கியலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் வீரலட்சுமியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான நடராசா, சிவகுரு மற்றும் சயாரட்ணம், காலஞ்சென்றவர்களான புலசிங்கம், ராசபூபதி மற்றும் நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான திலகவதி, யோகவதி, சிவமணி மற்றும் மங்கையக்கரசி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்தினி, நந்தினி, கணேசராஜா, கேசவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் இளங்கோ, ரவிசங்கர், சாந்தி, அஜந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்சுருதி, சுவாதி, அபிராமி, ஆரணி, கௌதம், அஸ்வினி, ஹர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை இல 44, செட்டித்தெருலேன், நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் இடம்பெற்று தொடர்ந்து அஞ்சலிக்கூட்டம் நடைபெறும். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல: 44,
செட்டித்தெருலேன், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 0777318740

(C-2308)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச - தனியார் பேருந்துகளை கண்காணிக்க ஜி.பி.எஸ் கருவிகள்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துகளில் ஜி.பி.எஸ் கருவிகள் பொருத்தப்பட்டு அவர்களது வழித்தடங்களை கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

அரசாங்கத்தின் கொள்கையாகவுள்ள இலத்திரனியல் மயப்படுத்தலை மேற்கொள்ள வேண்டியுள்ள தேவையுள்ளதாகக் குறிப்பிட்ட ஆளுநர், ஏனைய மாகாணங்களில் உள்ளதைப்போன்று இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துகளில் ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தப்பட்டு அவர்களது வழித்தடம் கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் இதை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உரியமுறையில் மத்திய அமைச்சுக்கு அறிவித்து மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

ஏற்கனவே ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இலங்கை போக்குவரத்துச் சபையும் தனியார் பேருந்துகளும் இணைந்த நேர அட்டவணையிலேயே சேவையில் ஈடுபடவேண்டுமெனவும் அதேபோல நீண்ட தூரப் பேருந்து நிலையத்திலிருந்தே சேவைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தில் மாற்றமில்லை எனவும் இது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஒழுங்கு முறையாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆளுநர் அறிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக அரசாங்கப் பணியாளர்கள் தனியாருக்குச் சொந்தமான வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி தூர இடங்களுக்கு தொடர்ச்சியாக



பயணிப்பதன் காரணமாக தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக வட இலங்கை தனியார் போக்குவரத்து ஒன்றியப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அதிகார சபையின் தலைவர் இது தொடர்பில் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாகவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தினார். சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் அமைச்சின் மூத்த உதவிச் செயலர் விளக்கமளித்தார். இதனடிப்படையில் இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக ஒழுங்குமுறைப் படுத்துவதற்காக கொள்கை ஆவணத்தைத் தயாரித்து வழங்குமாறும் ஏனைய மாகாணங்களில் பின்பற்றப்படும் நடைமுறைகளையும் கண்டறியுமாறும் ஆளுநர் பணிப்புரை விடுத்தார். (6-8)

## பெருஞ்சிவனிரவு

(யாழ்ப்பாணம்)

சைவநெறிக்கூட இணுவில் ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோயிலில் எதிர்வரும் 26 ஆம் திகதி மகா சிவராத்திரி விரத தினத்தன்று பெருஞ்சிவனிரவு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் நாள் முழுவதும் அடியவர்களின் கரங்களினால் ஞானலிங்கேச்சுரருக்கு திருமஞ்சனம் (அபிஷேகம்) செய்து வழிபட முடியும்.

மேலும் இரண்டாம் கால வழிபாட்டினைத் தொடர்ந்து 1008 சிவனடியார்கள் பாற்செம்பு கொண்டு திருமஞ்சனம் அபிஷேகம் செய்து வழிபடவுள்ளனர்.

பங்குபெற விரும்பும் அடியவர்கள் திருக்கோயிலில் முற்பதிவு செய்துகொள்ளுமாறு ஆலயத் தலைவர் அறிவித்துள்ளார். (6-8)





யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## பாண் விலையில் மாற்றமில்லை

### யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பாணின் விலையில் மாற்றம் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது என யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடலில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மக்களுக்கு தரமான பாண் விநியோகத்தை மேற்கொள்வதற்காக முதல் தரமான மாவாகிய குளோவர் மாவையே அதிகமாக பாண் உற்பத்தியாளர்கள் பாவிப்பதால் குளோவர் மாவில் விலை குறையுமிடத்து அல்லது மில் மாவு மேலும் 10 ரூபாவால் குறையுமிடத்து பாண் விலையில் கணிப்பாக மாற்றம் செய்ய முடியுமெனவும் அதுவரையில் பாண் விலையில் மாற்றம் செய்ய தேவையில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது. (6-8)

# புனரமைப்பு செய்ய வேண்டிய வீதிகளின் விபரங்களைத் திரட்டுக

## அரச அதிபர் பிரதீபன் அதிகாரிகளுக்கு பணிப்பு



(யாழ்ப்பாணம்)

வீதிப்புனரமைப்பு தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கமானது வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக வடமாகாணத்தின் வீதிகளைப் புனரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அதற்கமைய யாழ். மாவட்டத்தின் வீதிகளையும் புனரமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், மாவட்டத்தில் புனரமைக்க வேண்டிய வீதிகளின் விபரங்களைத் துல்லியமான முறையில் தயாரித்து உரிய அமைச்சிற்கு வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டதுடன் அதற்காக பிரதேச செயலக ரீதியாக புனரமைக்க வேண்டிய வீதிகளின் விபரங்களை வீதிகளுக்குரிய வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து சரியான முறையில் தயாரித்து மாவட்டத்தின் மொத்த தேவைப்பாடுகளையும் தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருந்தார்.

இக் கலந்துரையாடலில் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் பிரதி, உதவித்திட்டமிடல் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர். (6-8-30)

# உணவக உரிமையாளர்கள் இருவருக்கு அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சுகாதார சீர் கேடான முறையில் கொத்து ரொட்டி தயாரித்த உரிமையாளருக்கு 40 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், மற்றுமொரு கடைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டைப் பகுதியில் அப்பகுதி பொதுச் சுகாதார பரிசோதகரான ம.ஜெயப்பிரதீப் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது, சுகாதார சீர் கேடான முறையில் கொத்து தயாரித்த உணவக உரிமையாளருக்கும் மற்றுமொரு உணவகத்தில் மலசல கூடத்தினுள் மின் மோட்டாரை இயக்கி, நீர் வழங்கி வந்த நபருக்கும் எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.


குறித்த வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற போது உரிமையாளர்கள் இருவரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, சுகாதார சீர் கேடான முறையில் கொத்து தயாரித்த உரிமையாளருக்கு 40 ஆயிரம் ரூபாய் அபராதமும் மலசல கூடத்தினுள் மின் மோட்டாரை இயக்கிய உரிமையாளருக்கு 28 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்ததுடன் கடையினை சீல் வைத்து மூடுமாறு பொதுச் சுகாதார பரிசோதகருக்கு மன்று கட்டளையிட்டது.

நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் குறித்த உணவகம் பொதுச் சுகாதார பரிசோதகரால் சீல் வைக்கப்பட்டுள்ளது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
01
01
1936



மறைவு
19
02
2025

## யாழ்.தினக்குரல் கருணைப்பால தலைவர்

## அமரர் செல்லையா பொன்னுசாமி

வன்னி மக்களுக்கு உதவும் முகமாக கருணைப்பாலம் என்னும் சமூக அமைப்பை ஸ்தாபிப்பதற்கு யாழ்.தினக்குரல் பத்திரிகையூடாக களம் அமைத்து கொடுத்து அதன் தலைவராக விளங்கிய

**அமரர் எஸ்.பி.சாமி** அவர்களின்

மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

*அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...*

## கருணைப்பால குடும்பம்.

(C-2309)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆம் உலகப் போர் விரைவில்! எச்சரிக்கை விடுத்த ட்ரம்ப்

(வோஷிங்டன்)

**மூன்றாம் உலகப்போர் தொடங்கும் நாள் வெகுதொலைவில் இல்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



அதே நேரத்தில், தன்னால் தனது ஆட்சியால் அது நிகழ்வதைத் தடுக்க முடியும் எனவும் ட்ரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அனைவரும் உயிரிழப்பதைக் காண தனக்கு விருப்பமில்லை.

அத்தோடு, போர்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவும், அமைதியை நிலைநிறுத்துவதற்காகவும் தான் உலகம் முழுவதும் வேகமாக சுற்றிவருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழல் ஏற்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## இஸ்ரேலில் தொடர் குண்டு வெடிப்புக்கள்! மீண்டும் பயங்கரவாதத் தாக்குதலா?



(ஜெருசலேம்)

இஸ்ரேல் பேருந்துகளில் தொடர் குண்டுவெடிப்புகள் நிகழ்ந்துள்ளன.

மத்திய இஸ்ரேல், டெல் அவிவ் அருகே ஒரு வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த மூன்று பேருந்துகளில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளன.

மேலும் இரண்டு பேருந்துகளிலும் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதால், இது ஒரு பயங்கரவாதத் தாக்குதலாக இருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இருப்பினும், குண்டுவெடிப்பு நடந்த நேரத்தில் பேருந்துகள் காலியாக நிறுத்தப்பட்டிருந்ததால் அதிஷ்டவசமாக உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. யாரும் காயமடைந்ததாகத் தகவல் இல்லை.

குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து இஸ்ரேலிய பொலிஸாரும் வெடிகுண்டு நிபுணர்களும் அனைத்து முக்கிய இஸ்ரேலிய நகரங்களிலும் பேருந்துகள் மற்றும் ரயில்களில் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

பேருந்து குண்டுவெடிப்புகளுக்குப் பிறகு, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அவசர பாதுகாப்புக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார். பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்குமாறும் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொலிஸாரின் முதற்கட்ட அறிக்கையில், இவை சந்தேகத்திற்குரிய பயங்கரவாத தாக்குதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குண்டுகள் ஒரே பாணியில் வைக்கப்பட்டிருந்ததாகவும், அவற்றில் நேரக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

காசா போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையே நடந்து வரும் பணயக் கைதிகள் பரிமாற்றம் நடந்து வரும் சூழலில் இந்தக் குண்டுவெடிப்புகள் நடந்துள்ளன. (நி-8)

## இரு குழந்தைகள் உட்பட நால்வரின் உடல்கள் ஒப்படைப்பு



(ஜெருசலேம்)

ஹமாஸ் உடனான போர் நிறுத்த ஒப்பந்தம் காரணமாக இஸ்ரேலில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட பெண், அவரின் இரு குழந்தைகள் உட்பட நான்கு பேரின் உடல்களை ஹமாஸ் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் ஒப்படைத்தனர்.

பாலஸ்தீனத்தின் காசா பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாதிகள், மேற்காசிய நாடான இஸ்ரேலுக்குள் நுழைந்து, கடந்த 2023 ஒக்டோபர் 7இல் எதிர்பாராத தாக்குதல் நடத்தினர். இதில் 1,200 பேர் கொல்லப்பட்டனர். மேலும், 200 பேரை பணயக் கைதிகளாக கடத்திச் சென்றனர்.

இதனால், ஹமாஸை அழித்தொழிப்பது என்ற குறிக்கோளுடன் காசா மீது 15 மாதங்களாகக் கடும் தாக்குதல் நடத்தியது இஸ்ரேல்.

இதில் ஹமாஸ் பயங்கரவாதிகள், பொதுமக்கள் என 48,000 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, அமெரிக்கா மற்றும் ஐ.நாவின் முயற்சியால் போர் நிறுத்தம் அமுலில் உள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இரு நாடுகளும் கைதிகளை விடுவிக்க ஒப்புக்கொண்டனர்.

இதுவரை, 19 இஸ்ரேலிய பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். பதிலுக்கு, இஸ்ரேலும் சில கைதிகளை விடுவித்தது.

இந்நிலையில், ஹமாஸ் பயங்கரவாதிகளால் கடத்தப்பட்ட நான்கு பேரின் உடல்களை, அவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைத்தனர்.

நால்வரின் உடல்களை பெற்ற இஸ்ரேல், டி.என்.ஏ பரிசோதனைக்கு அனுப்பியுள்ளது. இவர்கள் அனைவரும், நவம்பர் 2023இல் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதாக ஹமாஸ் அறிவித்தது. இஸ்ரேல் அதிகாரிகள் இதை மறுத்துள்ளனர். (நி-8)

## பிரிக்ஸ் அமைப்பு நொருங்கி விட்டது

### என்கிறார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

வரி அச்சுறுத்தலுக்குப் பிறகு பிரிக்ஸ் அமைப்பு உடைந்து நொருங்கி விட்டது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ட்ரம்ப் தெரிவித்தாவது பிரிக்ஸ் அமைப்பினர் அமெரிக்க டொலரை அழிக்க முயன்றனர். அவர்கள் ஒரு புதிய கரன்சியை உருவாக்க விரும்பினர். நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு டொலரை அழிக்க முயற்சி செய்யும் நாடுகளுக்கும் 150 சதவீதம் வரி விதிப்பேன் என எச்சரிக்கை விடுத்தேன்.

இதனால் தற்போது பிரிக்ஸ் அமைப்பு உடைந்து நொருங்கி விட்டது. வரி விதிப்பு அச்சுறுத்தலுக்குப் பிறகு பிரிக்ஸ் அமைப்பு பற்றி எந்தத் தகவலும் வரவில்லை. அவர்களுக்கு என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரியவில்லை. என அவர் தெரிவித்தார். பிரிக்ஸ் அமைப்பு பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நான்கு நாடுகளுடன் தொடங்கப்பட்டது. தற்போது அந்த அமைப்பில் தென் ஆபிரிக்கா, எகிப்து, எத்தியோப்பியா, இந்தோனேசியா, ஈரான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளும் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாரதம்



# உலக வல்லரசாக மாறிவரும் இந்தியா பிரதமர் மோடி பெருமிதம்

(டில்லி)

இந்தியர் ஒவ்வொருவரும் நாட்டின் வளர்ச்சிக்காக இரவு பகலாக உழைக்கின்றனர். இந்தியா உலக வல்லரசாக மாறி வருகிறது, என பிரதமர் மோடி தெரிவித்தார்.

புதுடில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில், ஆன்மிகம் தொடர்பான மாநாட்டை பிரதமர் மோடி தொடக்கி வைத்தார். இந்த மாநாட்டில் பூட்டான் பிரதமர் ஷெரிங் டோப்கே சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது: வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும். இதற்கு மக்களின் வளர்ச்சி அவசியம். இந்தியா உலக அளவில், ஒவ்வொரு துறையிலும் மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

இதற்கு நல்ல தலைவர்கள் நமக்கு தேவை. முன்னேற்றத்தை இலக்காகக் கொண்ட எந்தவொரு நாட்டிற்கும் இயற்கை வளங்கள் மட்டுமல்ல, மனித வளங்களும் தேவை.

நாம் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் துறையில் வளர்ச்சியை துரிதப்படுத்த வேண்டும். இன்று ஒவ்வொரு இந்தியரும் 21ஆம் நூற்றாண்டின் வளர்ந்த இந்தியாவுக்காக இரவும், பகலும் உழைக்கிறார்கள்.

இந்தியா உலக வல்லரசாக மாறி வருகிறது. 140 கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டில் ஒவ்வொரு துறையிலும் வலுவான தலைமை அவசியம் என பிரதமர் மோடி தெரிவித்தார். (நி-8)




# வரி ஏய்ப்புப் புகாரை தீர்க்க இத்தாலிக்கு 340 மில்.டொலர்கள்

## கூகுள் நிறுவனம் ஒப்புதல்

(வோஷிங்டன்)

வரி ஏய்ப்புப் புகாரைத் தீர்ப்பதற்காக இத்தாலிக்கு 340 மில்லியன் டொலர்கள் கொடுக்க கூகுள் நிறுவனம் உறுதியளித்துள்ளது.

2015 - 2019ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் முறையாக வரி செலுத்தத் தவறியதற்காக இத்தாலி தலைநகரான மிலன் வழக்கறிஞர்கள் கூகுள் மீது வழக்கு விசாரணையைத் தொடங்கினர். இந்த வழக்கில் விளம்பரங்கள் மூலம் கிடைக்கும் வருமானங்கள் குறித்தும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இதனை ஒப்புக்கொண்டு அறிக்கை வெளியிட்டுள்ள கூகுள், வரி தணிக்கையுடன் வழக்கு இல்லாமல் தீர்த்து வைப்பதாக தெரிவித்துள்ளது.




கூகுள் தன் மீதான வரி ஏய்ப்பு விசாரணையைத் தீர்ப்பதற்காக 340 மில்லியன் டொலர்கள் கொடுக்க ஒப்புக்கொண்டதை அடுத்து அந்த வழக்கை முடித்துக் கொள்வதாக இத்தாலிய வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)

# 3500 ஆண்டுகள் பழைமையான கல்லறை எகிப்தில் கண்டுபிடிப்பு



(கெய்ரோ)

உலகின் பழைமையான நாகரிகங்களுள் எகிப்திய நாகரிகமும் ஒன்று. அங்கு அகழ்வாராய்ச்சியின்போது அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் சான்றுகளும் அதனை உறுதி செய்கின்றன.

அந்தவகையில் நைல் நதி அருகே உள்ள தீப்ஸ் மலைப் பகுதியில் அகழ்வாராய்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது. அங்கு பழைமை வாய்ந்த கல்லறை ஒன்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதனை ஆராய்ச்சி செய்தபோது கி.மு.15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டாம் துட்மோஸ் என்ற மன்னரின் கல்லறையாக இருக்கலாம் என தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

3 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கல்லறை கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களை வியப்பில் ஆழ்த்தி உள்ளது. (நி-8)

# விண்வெளியில் சுனிதா சிக்க காரணமே அரசியல்தான்

## எலான் மஸ்க் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

அரசியல் காரணங்களால் அமெரிக்காவின் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் என இருவரும் சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கி உள்ளனர் என ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன தலைவர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

. அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா சார்பில், போயிங் ஸ்டார்லைனர் ரொக்கெட் மூலம் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் கடந்த ஆண்டு ஜூன் 5ஆம் திகதி சர்வதேச விண்வெளி மையத்திற்குச் சென்றனர். அங்கிருந்து ஆய்வு நடத்திவிட்டு, ஜூன் 14ஆம் திகதி பூமிக்கு திரும்பும் நிலையில் அவர்கள் பயணித்த ஸ்டார்லைனர் விண்கலத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது. இதன்காரணமாக இருவரும் அங்கேயே இருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. 7 மாதங்களுக்கும் மேலாக அவர்கள் விண்வெளியில் தங்கி இருக்கின்றனர்.

இதற்கிடையே, இந்த மாதம் அவர்களை அழைத்து வர நாசா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் உதவியை நாடியது. ஆனால் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் தற்போது கால தாமதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, மேலும் அவர்கள் பூமிக்குத் திரும்ப ஒரு மாத காலம் ஆகலாம் என நாசா தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் விண்கலம் மார்ச் 12ஆம் திகதி விண்ணில் ஏவப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில், இந்தியா, போலந்து, ஹங்கேரி ஆகிய நாடுகளைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் செல்ல உள்ளனர்.

இந்த விண்கலம் மூலம் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் பூமிக்கு திரும்ப உள்ளனர் என நாசா தெரிவித்துள்ளது. இதற்கிடையே, அரசியல் காரணங்களால் அமெரிக்காவின் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் என இருவரும் சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கி உள்ளனர் என ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன தலைவர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் அறிவுறுத்தலுக்கு ஏற்ப அவர்களை பூமிக்கு அழைத்து வரும் பணியை



ஸ்பேஸ் எக்ஸ் துரிதமாக மேற்கொண்டது. இருந்தாலும் அது பல்வேறு காரணங்களால் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டது. சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோரை விரைவாக அழைத்து வர பணிகளை துரிதப்படுத்தி உள்ளோம். இருவரையும் விண்வெளியில் இருந்து வெற்றிகரமாக அழைத்து வருவோம்.

இதற்கு முன்பு எங்களது நிறுவனம் விண்வெளி மையத்தில் இருந்து விண்வெளி வீரர்களை பூமிக்கு பத்திரமாக அழைத்து வந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாளக் குழுக்கள் மீண்டும் உயிர்ப்பு

## விமல் வீரவன்ச சாடல்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அரசியல் பழிவாங்கல்களால் பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புப்படைகள் அதிருப்தியடைந்துள்ளன. இதனால் தேசிய பாதுகாப்பு பலவீனமடைந்து வரும் அதேவேளை, பாதாள உலகக் குழுக்கள் மீண்டும் உயிர் பெற்று வருவதாக முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போது நாட்டில் பல பகுதிகளிலும் தினந்தோறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகிக்கொண்டிருக்கின்றன. மித்தெனிய பிரதேசத்தில் இரு சிறுவர்கள் உள்ளிட்ட மூவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

தற்போது பாதாள உலகக் குழுவினர் உயிர் பெற்றுள்ளனர். நாளுக்கு நாள் சமூகத்தில் பாதுகாப்பற்ற தன்மை அதிகரித்து வருகிறது. பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் அடிப்படை காரணிகள் இன்றி இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இவ்வாறு ஒரே சந்தர்ப்பத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒருபோதும் இடமாற்றம் செய்யப்படவில்லை.

இதனால் பொலிஸாரும் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர். இதேவேளை மறுபுறத்தில் இராணுவம் மற்றும் புலனாய்வு பிரிவினரை பழிவாங்கும் படலங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவை அனைத்தின் ஊடாகவும் நாட்டின் பாதுகாப்பு பலவீனமடைந்து கொண்டிருக்கிறது. இவ்வாறான செயற்பாடுகளால் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்திய குழுவினர் பலவீனப்படுத்தப்படுகின்றனர். இவர்கள் பலவீனமடைவதால் தான் பாதாள உலகக்குழுவினர் தலைதூக்குகின்றனர்.

இவ்வாறான நிலைமையில் நாளுக்கு நாள் குற்றச் செயல்கள் அதிகரிக்குமே தவிர குறைவடையாது. அவற்றை நிறுத்தக் கூடிய இயலுமை இந்த அரசாங்கத்துக்கு இல்லை. போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலகக் குழுவினரை ஒழிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துக்கு அந்த வாக்குறுதியையும் நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-8)

# குற்றச் செயல்கள் தொடர்பில் முறையிட தொலைபேசி இலக்கங்கள்

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்கள் தொடர்பில் முறையிட பொலிஸாரால் தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, 119 அல்லது 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ள முடியும் எனப் பொலிஸார் பொதுமக்களிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த அவசர தொலைபேசி இலக்கங்களானது 24 மணிநேரமும் இயங்கும் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி-8)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 179, பிரான்பற்று வீதி, வட்டாரம்-05

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 05, பிரான்பற்று வீதியிலுள்ள இல: 179 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப் பதிவேட்டின் பிரகாரம் **திருமதி.S.T.ராசா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **தம்பிஜயா வயித்திலிங்கம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3013/01.01.1986 ஆம் இலக்க உறுதியால் **தம்பிஜயா சுப்பிரமணியம்** ஆகியவரிடமிருந்து அழியா நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**தம்பித்துரை பரமேஸ்வரன் பெண் இரஞ்சிதமலர்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4111/01.02.1988 ஆம் இலக்க உறுதியால் குறித்த **தம்பிஜயா வயித்திலிங்கம்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் பகுதியினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார். குறித்த **தம்பித்துரை பரமேஸ்வரன் பெண் இரஞ்சிதமலர்** காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசுகளான **அரங்கநாதன் பெண் கௌசிகா, பரமேஸ்வரன் மகள் ஷபிதா** ஆகியோருக்கு மாதாவழி முதுசமாக வந்தடைந்தது.

**அரங்கநாதன் பெண் கௌசிகாவும், பரமேஸ்வரன் மகள் ஷபிதாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3169/27.08.2017ஆம் இலக்க உறுதியால் குறித்த **தம்பிஜயா வயித்திலிங்கம்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்திற்கு சேர்ந்தவைகளான கிணற்றுப்பங்கையும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தையும் அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்கள்.

**செல்வராசா யெனதீபன் பெண் ஷபிதா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வைரமுத்து சுபாஸ்கரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1053/17.01.2024 ஆம் இலக்க உறுதியால் **அரங்கநாதன் சிவநாதனும் பெண் கௌசிகாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.
குறித்த **செல்வராசா யெனதீபன் பெண் ஷபிதா** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **செல்வராசா யெனதீபன் பெண் ஷபிதா** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**

(3470)

## வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 2025.03.09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தலைவர் DR.D.மாதவநாத் அவர்களின் தலைமையில் வைத்தியசாலை சிகிச்சை மண்டபத்தில் நடைபெறும்.

**நிகழ்ச்சி நிரல்**

01. தலைமையுரை
02. செயலாளர் அவர்களினால் சென்ற கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
03. செயலாளர் அவர்களினால் வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல்
04. பொருளாளர் அவர்களினால் ஆய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
05. கிடைக்கப் பெற்ற பிரேரணைகள் ஆராய்தல்
06. புதிய நிர்வாக சபை தெரிவு
07. பிற விடயங்கள்.

பிரேரணைகள் ஏதும் இருப்பின் 2025.03.02 ஆம் திகதிக்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியதாக செயலாளர், நோயாளர் நலன்புரிச்சங்கம், பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்வதோடு நடைபெறும் கூட்டத்திற்கு சமூகமளித்து வைத்தியசாலையின் முன்னேற்றத்திற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கியுதவுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

**Dr.D.மாதவநாத்**
**தலைவர்.**
**நோயாளர் நலன்புரிச்சங்கம்,**
**பிரதேச வைத்தியசாலை,**
**வல்வெட்டித்துறை.**

**திரு.ச.அரவிந்தன்**
**செயலாளர்,**
**நோயாளர் நலன்புரிச்சங்கம்,**
**பிரதேச வைத்தியசாலை,**
**வல்வெட்டித்துறை.**

(C-2306)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 96/1, மூளாய்வீதி 2 ஆம் ஒழுங்கை, வட்டாரம்-10

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 10, மூளாய் வீதி 2 ஆம் ஒழுங்கையிலுள்ள இல:96/1 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **தம்பு சின்னம்மா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் முழு ஆதனத்தின் ஒரு பகுதியினை **அருணி நாகலிங்கம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு **நா.ஏகாம்பரம்** முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5572/09.08.1978 ஆம் இலக்க உறுதியால் **வேலுப்பிள்ளை சபாநாயகம்** ஆகியவரிடமிருந்து அறுதியாக பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது 01.08.1978ஆம் திகதி சமாதான நீதிபதி நா.நடராச முன்பாக பெற்றுக்கொண்ட சத்தியக்கடதாசியினை குறிப்பிட்டே குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டிருந்தது.

குறித்த **அருணி நாகலிங்கம்** ஆகியவர் குறித்த முழு ஆதனத்தில் மற்றைய பகுதியினை பிரசித்த நொத்தாரிசு **நா.ஏகாம்பரம்** முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5577/23.08.1978 ஆம் இலக்க உறுதியால் **சின்னவன் அருணியும், காத்தி செல்லத்துரையும், கதிரவேலு இராசையாவும் பெண் சின்னம்மாவும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

**செல்லப்பா சிவலிங்கம் பெண் பூரணம்** ஆகியவர் குறித்த முழு ஆதனத்தையும் பிரசித்த நொத்தாரிசு **நா.ஏகாம்பரம்** முகதாவில் 5990/26.02.1983 ஆம் இலக்க உறுதியால் குறித்த **அருணி நாகலிங்கம்** ஆகியவரிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

**வடிவேலு சச்சிதானந்தம்பிள்ளை** ஆகியவருக்கு குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு **க.சிவலிங்கம்** முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5803/27.10.1985 ஆம் இலக்க உறுதியால் குறித்த **செல்லப்பா சிவலிங்கமும் பெண் பூரணமும்** ஆகியவர்கள் நிபந்தனை அறுதியாக கட்டுப்படுத்தி இருந்தார்கள்.

**அருணன் ரஞ்சனும் பெண் சற்குணதேவியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு **வே.த.மு.கதிர்காமநாதன்** முகதாவில் 10182/22.03.2009 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வடிவேலு சச்சிதானந்தம்பிள்ளையும் பெண் தங்கரத்தினமும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்கள்

**யோகராசர தவச்செல்வமும் பெண் பிரியதர்சினியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு **து.பாக்கியநாதன்** முகதாவில் 12953/09.03.2013 ஆம் இலக்க உறுதியால் குறித்த **அருணன் ரஞ்சனும் பெண் சற்குணதேவியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்கள்.

குறித்த **அருணன் ரஞ்சனும் பெண் சற்குணதேவியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு **து.பாக்கியநாதன்** முகதாவில் 14823/14.10.2016 ஆம் இலக்க உறுதியால் குறித்த **யோகராசா தவச்செல்வமும் பெண் பிரியதர்சினியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்கள்.

குறித்த **அருணன் ரஞ்சனும் பெண் சற்குணதேவியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள்** எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **அருணன் ரஞ்சனும் பெண் சற்குணதேவியும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**

(3467)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களை கண்டித்து

# எதிர்வரும் 27 ஆம் திகதி யாழில் போராட்டம்

## தீவக கடற்றொழில் அமைப்புக்கள் அழைப்பு

**(யாழ்ப்பாணம்)**

**இந்திய மீன்பிடியாளர்களின் சட்டவிரோத இழுவைப் படகு தொழில் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துமாறு கோரி எதிர்வரும் 27 ஆம் திகதியன்று யாழ் நகரில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக தீவக கடற்றொழில் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.**

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

இந்திய மீனவரின் சட்ட விரோத இழுவைமடி தொழில் நடவடிக்கையானது எமது தீவகப் பிரதேசத்தை கடுமையாகப் பாதித்து வருகின்றது.

இதை நிறுத்துமாறு நாம் பல போராட்டங்கள், கோரிக்கைகளை முன்வைத்தாலும் அதற்கான தீர்வு கிடைக்கவில்லை.

இந்நிலையில் எமது வாழ்வுரிமைக்கான பொருளாதார ஈட்டலை உறுதி செய்ய நாம் வீதிக்கிறங்கி போராடத் தீர்மானித்துள்ளோம்.

அதனடிப்படையில் தீவக கடற்றொழில் அமைப்புக்களான மண்டைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, வேலணை, புங்குடுதீவு உள்ளிட்ட கடற்றொழில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுக்க உள்ளோம்.

அதனடிப்படையில் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் போரட்டம் யாழ் பண்ணையில் உள்ள கடல்வள நீரியல் திணைக்களம் முன்பாக ஆரம்பித்து ஆளுநர் அலுவலகம் வரை ஊர்வலமாக செல்லவுள்ளதுடன் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றையும் வழங்கவுள்ளோம்.

இந்தப் போராட்டத்துக்கு யாழ்.மாவட்ட கடற்றொழில் அமைப்புக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பு வழங்கி போராட்டத்தை வலுவூட்டுமாறு அழைப்பு விடுத்துள்ளனர். (6-8-33)

# யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக் கோவில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே.ஆர்.முனிரத்தினம் வழங்கவுள்ளார்.

எனவே பயிற்சி பெற விரும்புவர்கள் மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# டிப்பர்-மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் படுகாயம்



(குருமன்காடு)

வவுனியா - மன்னார் வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள வேப்பங்குளம் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்பிய டிப்பர் வாகனம் ஒன்று வீதியில் ஏற முற்பட்ட போது நகரில் இருந்து வேப்பங்குளம் 8 ஆம் ஒழுங்கையில் திரும்ப முற்பட்ட மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டர் சைக்கிளில் பயணித்த பெண் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-8-250)

# பச்சிலைப்பள்ளியில் இடம்பெற்ற கண்காட்சி



(கிளிநொச்சி)

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை, மனைப்பொருளியல் கண்காட்சி நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் இ.த. ஜெயசீலன் தலைமையில், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.உமாபாலன் கிராம/மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாச தலைவர் செ.நாகசெல்வம் ஆகியோரும் விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் பயிற்சி பெற்ற மாணவிகளின் ஆடைகள், கேக் வகைகள், உணவு வகைகள், கைவினைப் பொருட்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மேலும் பயிற்சிகளை நிறைவு செய்த மாணவிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பயிற்சிகளை நிறைவு செய்த மாணவிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (6-8)



மக்களின் எழுச்சிக்காக சமூக மட்டத்தில் சேவையாற்றும் மனிதநேய செயற்பாட்டாளர்களை வாழும்போதே வாழ்த்துவோம் பசுமையை நேசிப்போம் என்னும் தொனிப்பொருளில் கடந்த வாரம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் ஊடகவியலாளர் மு.மதிவாணனுக்கு Mano of Nation-2025 எனும் விருது வழங்கி வைக்கப்பட்டது. (படம்-மகாலிங்கம்)

# தங்க ஆபரணம் கண்டெடுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-கரைச்சி பிரதேச செயலகத்தில் தங்க ஆபரணம் ஒன்று அலுவலக உத்தியோகத்தரால் கண்டு எடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காண்பித்து அலுவலக நாட்களில் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ள முடியும் எனக் கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் அறிவித்துள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின்
# பொன்னியின் செல்வன் 709
## காவியத்தொடர்-பாகம் -III





என்னுடைய ஜாதக பலமும் சரியாயிருந்தது. அதனால் நான் உயிர் பிழைத்தேன். தங்களுடைய திட்டம் தவறிப் போனது பற்றி அறிந்த பிறகும் என்னைச் சிம்மாசனம் ஏறவிடாமல் தடுப்பதற்குப் பல சூழ்சசிகள் செய்தீர்கள்.

என்னைச் சிவபக்தனாக, அதாவது பைத்தியக்காரனாக வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்தீர்கள். அதிலும் தவறிப் போனீர்கள். நான் தாங்கள் விரும்பியது போல் அவ்வளவு முழுப் பைத்தியக்காரனாகி விடவில்லை. ஐயா! முதன் மந்திரியே! ஏன் இப்படி ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்திருக்கிறீர்? இவையெல்லாம் உண்மையில்லையென்று ஒரேயடியாகச் சாதிப்பது தானே?"

முதன் மந்திரி உண்மையில் ஸ்தம்பித்துப் போய்த் தான் உட்கார்ந்திருந்தார். ஒருவாறு பேசும் சக்தியை வருவித்துக் கொண்டு "இளவரசே! தங்களுக்கு இவ்வளவெல்லாம் விவரங்கள் தெரிந்திருக்கும் போது நான் இல்லையென்று சாதிக்கப் பார்ப்பதில் என்ன பயன்?" என்றார்.

"ஆமாம் பயனில்லைதான்! என்னிடம் திடீரென்று நீர் பரிவு கொண்டதன் காரணமும் எனக்குத் தெரியும். ஆதித்த கரிகாலனை உமக்குப் பிடிக்காது. அருள்மொழிவர்மனைச் சோழ நாட்டின் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க எண்ணியிருந்தீர். அவனைக் கடல் கொண்டு விட்டதனால் இப்போது என்னிடம் பரிவு கொண்டிருக்கிறீர்! ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன். முன்னர் நீர் எனக்குச் செய்த தீங்குகளையெல்லாம் மறந்துவிடப் போகிறேன். இன்று நீர் எனக்குச் செய்த உதவிக்கு நன்றியும் செலுத்துவேன். இன்று முதல் நீர் என் கட்சியில் இருப்பதாகச் சொல்லும் பட்சத்தில் நான் சிம்மாசனம் ஏறியதும் உம்மையே முதன் மந்திரியாக வைத்துக் கொள்ளவும் விரும்புகிறேன்!" என்றான் மதுராந்தகன்.

"இளவரசே! தங்களுடைய வார்த்தைகள் என்னைப் புளகாங்கிதம் அடையச் செய்கின்றன!" என்றார் அன்பில் அநிருத்தப் பிரம்மராயர்.

### 42 ஆம் அத்தியாயம்
### சுரம் தெளிந்தது

நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் ஆச்சாரிய பிக்குவின் அறைக்குப் பக்கத்து அறையில் பொன்னியின் செல்வன் மரக்கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான். மூன்று நாள் அவனுக்குக் கடும் சுரம் அடித்துக் கொண்டிருந்தது. பெரும்பாலும் சுயப் பிரக்ஞையே இல்லாமலிருந்தது.

இந்த நாட்களில் பிக்குகள் அவனைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டு வந்தார்கள். வேளைக்கு வேளை மருந்து கொடுத்து வந்தார்கள். அடிக்கடி வாயில் தண்ணீர் ஊற்றிக் கொண்டு ஜாக்கிரதையாகப் பார்த்து வந்தார்கள்.

இடையிடையே எப்போதாவது சுயநினைவு தோன்றிய போது, தான் இருக்குமிடத்தைப் பற்றி அவன் எண்ணிப் பார்க்க முயன்றான். அவனுக்கு எதிரில் சுவரில் எழுதியிருந்த சித்திரக் காட்சி அவனுடைய கவனத்தைக் கவர்ந்தது. அந்தச் சித்திரத்தில் தேவர்கள், கந்தவர்கள், யக்ஷர்கள் காணப்பட்டார்கள். அவர்களில் சிலர் பலவித இன்னிசைக் கருவிகளை வைத்துக் கொண்டிருந்தார்கள்.

சிலர் வெண்சாமரங்களையும், வெண்கொற்ற குடைகளையும் ஏந்திக் கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் கரங்களில் பல வர்ணமலர்கள் உள்ள தட்டுக்களை ஏந்திக் கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சி தத்ரூபமாக இருந்தது. தேவர்களின் உருவங்கள் எல்லாம் உயிர் உள்ள உருவங்களாகத் தோன்றின.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்
# நல்லொழுக்கம்



(நேற்றையதொடர்ச்சி...)

"என் பையன் அப்படி எல்லாம் பண்ண மாட்டான். வேறு யாரோ திருடியதற்காக இவன் மேல் பழியைப் போடாதீர்கள்" என்று சொல்லி தோட்டக்காரனை அனுப்பி விட்டார்கள்.

அவன் அம்மா அவனை கண்டிக்காமல் இருந்ததனால் அவனால் அவன் தப்பை உணர முடியவில்லை. இந்த மாதிரிச் சம்பவங்கள் நடந்த போது தான் அம்மா அவனுடைய குணத்தை உற்சாகப்படுத்துகிறார் என்று நினைத்தான் பாலு.

சில வருடங்களுக்கு பின்பு பாலு பெரியவன் ஆனான். வயது அதிகமாக நம்முடைய தேவைகளும் மாறும். அவன் சின்ன வயதில பழங்களை யும் காய் கறிகளையும் திருடினான். ஆனால் இப்போது அவன் தேவைகளுக்கு ஏற்ற மாதிரிப் பணம், அடுத் தவர்களின் பர்ஸ் போன்ற பொருட்களை திருட ஆரம்பித்தான்.

அவன் அம்மா நினைத்தார் பாலு பெரிய பையன் ஆகி விட்டான். அவன் என் பேச்சை கேட்க மாட்டான் என்று நினத்து அவனை அப்பவும் கண்டிக்க வில்லை. ஒரு முறை அவன் திருடும் போது அவனைப் பொலிஸ் கையும் களவுமாக பிடித்து விட்டார்கள்.

பொலிஸ் அவனைப் பிடித்துக் கொண்டு போகும் போது அவன் அம்மாவுக்கு உண்மை தெரிந்து அழ ஆரம்பித்தார். அப்போது பாலு அவன் அம்மா விடம் சொன்னான் "இப்ப அழுது என்ன பிர யோசனம் அம்மா, நீங்கள் நான் முதற் தடவை நாயுடுவின் தோட்டத்தில் இருந்து திருடிய போது என்னைத் தடுத்திருந்தால் நான் இந்த நிலைமைக்கு வந்திருக்க மாட்டேன்" என்று சொன்னான். பொலிஸ் அவனை பொலிஸ் ஸ்டேஷ னுக்கு கூட்டிக் கொண்டு போனார்கள்.

கருத்து: இந்த கதையோட நீதி என்னவென்றால் எப்போதெல்லாம் குழந்தைகள் தப்பு செய்கிறார்களோ ? அப்போதெல்லாம் அவர்கள் செய்தது தவறு என்று உணர வைக்க வேண்டியது அவர்கள் அம்மா அப்பாவினுடைய பொறுப்பு.

இல்லை என்றால் குழந்தைகள் வளரும் போது அந்தத் தப்புகள் பழக்கமாக மாறி தப்பான வழியில் கொண்டு போகும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> நற்பண்புகள் மனித குலத்தின் உயரிய சொத்தாகும், அதுவே நம் வாழ்வை ஜொலிக்கச் செய்யும்.
> ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அதிபரின் கொலை பயங்கரத்தின் உச்சம்

பூநகரி தனங்களப்புப் பகுதியில் இனந்தெரியாதவர்கள் நடத்திய தாக்குதலில் ஓய்வு பெற்ற அதிபர் விசுவாசம் அவர்கள் உயிரிழந்த சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தவிர, பிரஸ்தாப ஓய்வுநிலை அதிபரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிவந்த மற்றொரு அதிபரும் குறித்த நபர்களின் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி சனிக்கிழமை இரவு வேளை நடந்த இந்தச் சம்பவம் வடபகுதியில் நிலவுகின்ற ஓர் அமைதியான சூழலைக் குழப்புவதாக அமைந்துள்ளது.

அதிலும் நிறைபோதையில் நின்றவர்களே இக்கொடும் செயலைச் செய்துள்ளதான தகவல்கள் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

ஆம், அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் வடக்குக் கிழக்கு தமிழர் பகுதியில் வாகன விபத்துச் சம்பவங்களும் இனந்தெரியாதவர்கள் நடத்துகின்ற தாக்குதல்களும் குறைவடைந்திருந்தன.

இஃது தமிழ் மக்கள் மத்தியில் ஆறுதலை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இந்நிலைமை சில மாதங்களுக்குள் மாற்றம் கண்டுள்ளமை அதிர்ச்சியைத் தருவதாகும்.

ஆம், நிறைபோதையில் அட்டகாசம் செய்தவர்களால் ஓர் அப்பாவி அதிபர் உயிரிழந்துள்ளார் என்பது சாதாரணமான விடயமல்ல.

அதிலும் இரண்டு அதிபர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கும் போது, காரணகாரியமின்றி அவர்களை இடைமறித்து அவர்கள் மீது மோசமான தாக்குதலை மேற்கொண்டு ஒருவரைக் கொலை செய்வதென்பதன் நோக்கம் என்ன என்பது புரியவில்லை.

தவிர, இவ்வாறான சம்பவங்கள் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்துவதுடன் அதன் எதிர் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கவே செய்யும்.

உண்மை. கடந்த காலங்களில் நம் தமிழர் பகுதிகளில் கூலிக்குத் தாக்குதல் நடத்துகின்ற கலாசாரம் மேலோங்கி இருந்தது.

அதிலும் குறிப்பாக, வெளிநாடுகளில் இருப்பவர்கள் இங்கு கூலிக்கு ஆட்களை நியமித்து தமது வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

இந்த நிலைமை ஓரளவுக்குத் தணிந்தது என்ற சூழமைவு இருக்கையில், இப்போது போதைக்கு ஆளானவர்களின் காடைத்தனம் தலைவிரித்தாடுவது பயங்கரமான சூழலை ஏற்படுத்தியுள்ளது.

எனவே ஓய்வுநிலை அதிபர் தாக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

அதேநேரம், போதை காரணமாக இக்கொலை இடம்பெற்றது என்ற தீர்மானத்தோடு மட்டும் விசாரணைகளை மட்டுப்படுத்தாமல், குறித்த தாக்குதலுக்கும் கொலைச் சம்பவத்துக்கும் ஏதேனும் பின்னணி உண்டா? என்பது பற்றியும் பொலிஸார் விசாரணைகளை விரிவுபடுத்துவது அவசியம்.

எதுஎவ்வாறாயினும் குறித்த தாக்குதலை நடத்தியவர்களை விரைந்து கைது செய்வதும் அவர்களுக்கான தண்டனையைக் காலதாமதமின்றி வழங்குவதும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் என்பதால், இதுவிடயத்தில் கல்விசார் அமைப்புகள் மற்றும் சமூக நலனில் அக்கறை கொண்ட அமைப்புகள் இதற்காகக் குரல் கொடுக்க வேண்டும்.

# அரசியல் கட்சிகள் போன்று தொழிற்சங்கங்கள் செயற்படக்கூடாது

## வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)

தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகள் போன்று செயற்படக்கூடாது. தொழிற்சங்கங்களும் உரிய வகையில் சேவையாற்றிக் கொண்டே அதை மேம்படுத்தும் வகையில் தங்களுக்கான தேவைப்பாடுகளைக் கோர வேண்டும் என வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கம், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம், வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம் என்பனவற்றின் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் தனித் தனியே சந்தித்து நேற்றுக் காலை கலந்துரையாடினர்.

கொடுப்பனவுகளை அதிகரித்தல், இடமாற்றங்கள் தொடர்பில் அனைத்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளாலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன்போது கொடுப்பனவு அதிகரிப்பு மீளாய்வுக்கு இணக்கமும் தெரிவிக்கப்பட்டது. இடமாற்றங்களும்சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுடன் ஆராய்ந்து முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தமது திருத்தப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு தொடர்பான ஆட்சேபனைகளை முன்வைத்திருந்தனர். மேலும் மூன்றிலொரு பகுதி ஆளணி வெற்றிடமாகவுள்ள நிலையிலும், தம்மிடமிருந்து நூறு சதவீத சேவை எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

இது சாத்தியமில்லாத விடயம் எனவும் தெரிவித்தனர். வதிவிடப் பயிற்சிநெறி நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பிலும் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். ஆளணி வெற்றிடத்துக்கு சில மாற்றுஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதுடன் வதிவிடப் பயிற்சிநெறியை தற்போதைய காலத்துக்கு ஏற்ப மாற்றியமைக்கவும் இணக்கம் காணப்பட்டது.

கூட்டுறவில் ஒரு காலத்தில் வடக்கு மாகாணம் கொடிகட்டிப் பறந்ததாகக் குறிப்பிட்ட ஆளுநர், தற்போது அது பின்னடைவான நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டனர். அதை உயர்த்தும் பொறுப்பு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் உண்டு.

சமூகப் பொறுப்புடன் செயலாற்றவேண்டும். அதேபோல இன்னும் வினைத்திறனாகச் செயற்பட எவ்வாறான சட்டத்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பதையும் பரிந்துரைக்குமாறு ஆளுநர் இதன்போது கோரினார். வடக்கு மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தால் கோரப்பட்ட தளபாட வசதிகள், காகிதாதிகள் என்பனவற்றை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

மேலும் களத்தரிசிப்புக் கொடுப்பனவு தொடர்பில் நிலவும் முரண்பாடுகளை சீர்செய்யவும் உறுதியளிக்கப்பட்டது. தேசியமட்ட நிலைப்பாட்டுக்கு அமைவாக ஆசிரிய வளவாளர்கள் என நியமிப்பதை விடுத்து பதில் ஆசிரிய ஆலோசகர்கள் என்ற பதவி நிலைக்கு நியமிக்க வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இணக்கம் வெளியிட்டார். (ம-7)

## பணவீக்கம் வீழ்ச்சி

இலங்கையின் முதன்மைப் பணவீக்கம் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆண்டு அடிப்படையில் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்க வீதம் 2025 ஜனவரி மாதத்தில் -4.0% ஆகக் குறைந்துள்ளது.

இது 2024 டிசம்பர் மாதத்தில் -2.0% ஆகப் பதிவாகியிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், உணவுப் பணவீக்கமும் 2024 டிசம்பரில் -1% ஆக இருந்த நிலையில், 2025 ஜனவரியில் -2.5% ஆகக் குறைந்துள்ளது.

இதேவேளை உணவு அல்லாத பணவீக்கம் 2024 டிசம்பரில் பதிவான -2.9% இலிருந்து -5.2% ஆகக் கணிசமாகக் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அக்கரைப்பற்றில் வாகன விபத்து

### இருவர் உயிரிழப்பு

அக்கரைப்பற்று - அம்பாறை பிரதான வீதி, அரசடிப் பகுதியில் கனரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்தானது நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆலையடிவேம்பு சாயிராம் வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய பவிகாஸ் மற்றும் அதே வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய தவராசா விதுஷ்சன் ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அம்பாறையிலிருந்து அக்கரைப்பற்று ஆலையடி வேம்பிலுள்ள வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை 3.00 மணியளவில் பிரயாணித்தனர்.

இதன்போது அரசடிப் பகுதியிலுள்ள வளைவில் அக்கரைப்பற்றிலிருந்து அம்பாறை நோக்கிப் பிரயாணித்த கனரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் ஸ்தலத்திலே உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தநிலையில் படுகாயமடைந்தவர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

## உழவு இயந்திரம் விபத்து இராணுவ வீரர் உயிரிழப்பு

(கொழும்பு)

உழவு இயந்திரம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இராவணா கொட பகுதியைச் சேர்ந்த இராவணா கொட விஜயபாகு முகாமில் பணியாற்றும் இராணுவ வீரர் கொட்டாஹேன பிட்டிய ஜயந்த ஜனித் ஹேரத் (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விடுமுறை நிமித்தம் தனது வீட்டுக்கு வந்த குறித்த இராணுவ வீரர் விவசாயப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது இந்த விபத்து சம்பவித்துள்ளது.

சடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் உள்ள பிரேத அறையில் வைக்கபட்டுள்ளது.

திம்புள பத்தனை பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ம-7)

கம்பஹாவில்

## 29 வயது இளைஞன் சுட்டுக் கொலை

(கம்பஹா)

கம்பஹா ஜா-எல, பமுனுகமவில் உள்ள மோர்கன்வத்த கடற்கரையில் 29 வயது இளைஞர் ஒருவர் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரியால் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில், துப்பாக்கிச் சூடு T-56 ரகத் துப்பாக்கியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் உயிரிழந்தவர் கடவத்தையைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மற்றும் கொலைக்கான நோக்கம் குறித்து இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்ததான முகாமும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வரும் பவ்ரல் அமைப்பின் நீண்ட நாள் செயற்பாட்டாளர் அமரர். சிறீதரன் சபா நாயகத்தின் 3 ஆவது மாத நினைவினை முன்னிட்டு இன்று சனிக்கிழமை இரத்ததான முகாமும், சட்ட ஆலோசனைகள் மற்றும் கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு அரியாலை நெடுங்குளம் சந்தியிலுள்ள சர்வோதய அமைப்பின் தலைமை யகத்தில் குறித்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (6-8)



## எனது 34 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே... சோழியபுரம் பத்ம வெளியீடு

ஈசுர விநாயகர் வந்துவிட்டேன் என்று தமிழ் மக்கள் எல்லோருக்கும் பகிரங்கமாகக் காட்டியருளி விட்டார். அதாவது சங்கடகர சதுர்த்தியில் தேர்தல், என்றுமில்லாதவாறு அரசியல் மாற்றம் இவை தான் ஈசுரவிநாயகர் வந்து விட்டார் என்பதற்கு அடையாளம்.

**என் இனிய நெஞ்சங்களே!**

எமது தீராத பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 'வந்தருளிய இறை நீதிமன்றத்தின் நீதியரசர் சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகரை வரவேற்பது தமிழ் மக்களாகிய எமது தலையாய கடமையாகும். எனவே எல்லோரும் அவரின் புகழைப் பாடி, வாழ்த்தி வணங்கி வரவேற்போம். ராஜா சபைக்கு வரும் போது காவலாளிகள் வந்து ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட, ராஜ கம்பீர, ராஜ குணதிலக என்றெல்லாம் அவரை மரியாதை கொடுத்து வரவேற்பார்கள். ராஜா வந்து சிம்மாசனத்தில் அமர்ந்ததும் புலவர்கள் வந்து ராஜாவை வாழ்த்திக் கவி பாடுவார்கள். ராஜா தன்னைப் புகழந்து பாடிய புலவர்களுக்குப் பரிசாக பொற்காசுகள் கொடுத்து அனுப்பி வைப்பார். அது போல எங்கள் தீராத பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வந்தருளிய ஈசுரவிநாயகரைப் பாடிப்பரவி தோப்புக்கரணம் போட்டு நெற்றியிலே குட்டி வணங்கி வரவேற்போமாக:

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்..

மாங்களம்! மாங்களம்! நித்திய சுபமாங்களம்
அம்பிகை நற்பாலருக்கு ஐயன்சிவனேசருக்கு தம்பி துயர் தீர்த்தவர்க்கு தலம் பறாளை ஈசருக்கு-மாங்களம்
ஆறுமுக நேசருக்கு, ஆனைமுக ஐங்கரர்க்கு கூறும் வாக்கைத் தீர்ப்பவர்க்கு குலதெய்வமானவர்க்கு-மாங்களம்
காகமாக வந்தவர்க்கு கருணை மழை பொழிந்தவர்க்கு பாகமாகச் சித்தி புத்தி பாங்கிலுறை பரம் சோழியர்க்கு-மாங்களம்
தொல்துலகம் போற்றுகின்ற சுழிபுரம் வாழ் ஈசர்க்கு-நல்வயல் சேர் பறாளையுறை நாதபரம் சோதியர்க்கு-மாங்களம்
முத்தமிழைத் தந்து எங்கள் பிரச்சினையைத் தீர்ப்பவர்க்கு எத்திசையும் போற்றுகின்ற எங்கள் பறாளை ஈசர்க்கு-மாங்களம்
மாங்களம்! மாங்களம்! நித்திய சுப மாங்களம்!

வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழ
பான்மை தரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கின்றோம்

**விநாயகரைப் பற்றிய முத்தான தகவல்கள்**

விநாயகர் வழிபாடு, இலங்கை இந்தியா நாட்டில் மட்டுமன்றி பர்மா, சீனா, சுமத்திர, சம்பா, கம்போடியா, இந்தோனேசியா, மலேசியா, மங்கோலியா என்று பற்பல நாடுகளிலும் பல நூற்றாண்டு காலமாக வெவ்வேறு பெயர்களில் வணங்கி வருகின்றனர். திருக்குறளிலும் விநாயகர் வழிபாடு காணப்படுகின்றது. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்கே உலகு" என்று விநாயகர் வழிபாட்டைத் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். "முன்னவனே யானை முகத்தவனே" என்று வள்ளலாரும் பாடியுள்ளார். இதிலிருந்தே விநாயகர் வழிபாடு பண்டைக் காலத்திலே இருந்தது என்பது தெளிவாகின்றது. பர்மா நாட்டில் புத்த பெருமானைக் காக்கும் தெய்வமாக விநாயகரை வணங்குகிறார்கள். விநாயகர் தனது தந்தத்தை முறித்து வியாசருக்கு மகாபாரதத்தை எழுதிக் கொடுத்தார். இப்படித் தன்னை நம்பி வணங்குகின்ற எல்லோருக்கும் அருள் பாலிப்பவர் விநாயகப் பெருமான்.

"ஓம் ஏக தந்தயா வித்மஹே வக்ர துண்டாய தீமஹி தந்தோ தந்திப் ப்ரசோதயாத்" என்பது விநாயகர் காய்த்திரி மந்திரம். இதன் விளக்கம், ஒரு தந்தம் உடையவரைத் தியானித்து நிற்கின்றோம். வளைந்த துதிக்கையை உடையவர் செறிவான அறிவைத் தர வேண்டும். வாழ்வு ஒளிமயமாகத் திகழ வேண்டும் என்பதாகும். இம் மந்திரத்தை எல்லோரும் ஒவ்வொரு நாளும் ஒரு தடவை சொல்லுங்கள். எங்கள் துன்பங்கள் நீங்கும். நோய்களுக்கு மருந்து சாப்பிடுகின்றோம். அந்த மருந்து சித்திக்க இறைவன் அருள் வேண்டும். அப்போது தான் நோய் மாறும். எனவே இறைவனை நினையுங்கள் வணங்குங்கள் எல்லாத் துன்பங்களும் நீங்கி இன்பமாக மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

**என் அன்பு உள்ளங்களே!**

"அவனுக்குத் தான் தெரியும் அந்த ஆரம்பமும் அதன் முடிவும்-அட யாருக்கும்மா புரியும் அவன் வேடிக்கையும் அதன் விளைவும்" ஆம் ஈசுர விநாயகருக்குத்தான் தெரியும். எங்கள் நாட்டுப் பிரச்சினையின் ஆரம்பமும் அதன் முடிவும். அவர் தான் இப் பிரச்சினைக்குரியவர் என்பதை அப்பப்போ தர்சனங்களைக் காட்டியருளி நடைமுறையில் நிரூபித்துக் கொண்டு எங்கள் எல்லோரையும் வழிநடத்திக் கொண்டு செல்கின்றார். அவரின் திருவிளையாடல்களை நடைமுறையில் உணர்வோமாக.

"நடப்பவை யாவும் நன்மைக்கே"

**மேன்மை கொள் சைவநீதி உலகெமல்லாம் விளங்கும்**

ஆன்மீகம் என்பது எம்மை மேம்படுத்துவது. இறைவழிபாடு என்பதும் இறை நம்பிக்கையும் நம்மை எந்த வயதிலும் பக்குவப்படுத்துவது. இறைவன் நேரில் வரமாட்டார். நாங்கள் தான் நடைமுறையில் உணர்ந்து கண்டுபிடிக்க வேண்டும். அதாவது நீங்கள் கஷ்டத்தில் இருக்கும் போது ஒருவர் வந்து உங்களுக்கு உதவி செய்கின்றார் என்றால் இறைவன் தான் அவரை அனுப்பியிருக்கின்றார் என்று உணர வேண்டும். யாரும் எதிர்பாராத சம்பவங்கள் நடக்கின்றது என்றால் அது இறைவனால் நடத்தப்படுகின்றது என்பதை நாம் உணர வேண்டும். இறைவன் யார் யாருக்கு எந்தெந்த வடிவம் தாங்க வேண்டுமோ அந்தந்த வடிவம் தாங்கி அவரவர் துன்பங்களைப் போக்குவார். எனவே இறைவனை வழிபடுவோம் அவர் திருவருளைப் பெறுவோம்

"பார் தெரியுது பறாளாயான் பதி
பக்தர் குறை தீர்க்கும் சந்நிதி"

**சோழியூரான் பிறைசூடிக்குரு,**
**(ஆன்மீகவாதியும், ஓய்வு நிலை ஆசிரியரும்,**
**சந்ததிப் பூசகரும், பரம்பரைப் பரிபாலகரும்)**

(3478)

## இராசிபலன்

22.02.2025
மாசி 10, சனிக்கிழமை
நவமி முற்பகல் 10.37 மணிவரை

கேட்டை முற்பகல் 3.13 மணிவரை
சுபநேரம் 3.31-5.01 மணிவரை
இராகுகாலம் 9.31-11.01 மணிவரை

சந்திராஷ்டமம் -
கார்த்திகை, ரோகிணி

**வளவன்**




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.




பொது வாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் கூடிய அக்கறை காட்டுவீர்கள்.




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.




பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.




காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையலாம், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், வெளியூர் பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.





பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.





தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு, சுபகாரியங்களில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.





எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.





ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், விருந்தினர்கள் வருகையால் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம்.




கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், புதியவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், கடன் சுமை குறையும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




சோம்பலை விலக்குவது நல்லது, சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.




புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**வறுமையில் நிறைவு காண்பவனே உண்மையான பணக்காரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழைக்குலை...

வண்டியில் வாழைக்குலை ஏற்றிச் சென்றபோது 6.30 மணியளவில் டச்சு றோட் இரும்புக் கடைக்கு அருகாமையில் வீதியில் மயங்கி விழுந்துள்ளார்.

அப்பகுதியால் வந்தவர்கள் அவரை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணையை மேற்கொண்டார். (ம-7,60)

## மோ.சைக்கிள்...

யில் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் வியாழக்கிழமை (20) குறித்த இளைஞன் தனது நண்பனுடன் மோட்டார் சைக்கிளில் ஆறுகால்மடம் வைரவர் கோவில் பகுதியில் பயணித்தவேளை வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற பிரஸ்தாப இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## கப்பல் சேவை...

கேசன்துறையிலிருந்து பயணத்தை ஆரம்பித்து நாகப்பட்டினத்தைச் சென்றடையும்.

இந்தக் கப்பல் சேவையானது செவ்வாய்க்கிழமை தவிர்ந்த வாரத்திற்கு 6 நாட்கள் ஈடுபடும் என கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாகக் குறித்த கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

பின்னர் தொழில்நுட்ப அனுமதி கிடைப்பதில்ஏற்பட்டுள்ள தாமதம்காரணமாக தமது சேவையைத் தொடர்ந்தும் கப்பல் நிறுவனம் ஒத்திவைத்திருந்தது.

இந்த நிலையில் இன்று மீண்டும் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கப்பல் நிறுவனத்தினர் தெரிவித்தனர். (ம-7)

## தனிமையில்...

சிவபாக்கியம்(வயது-70) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வீட்டு முற்றத்தில் வெயிலில் அதிக நேரமாக வீழ்ந்து கிடந்ததன் காரணமாக இவரது தோல் உரிந்த நிலையில் காணப்பட்டது.

மரண விசாரணையையாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## யாழில்...

கத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற பாதீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"வெளிநாட்டுத் தூதுவர்களாக இருக்கலாம், அமைச்சர்களாக இருக்கலாம், ஜனாதிபதியாக இருக்கலாம். வடக்குக்கென வரும்போது யாழ்ப்பாணத்தில்தான் முகாமிடுகின்றனர். வடக்கு என்பது ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியது. எனினும், வன்னிக்குப் பெரிதாக எவரும் வருவதில்லை. தேர்தல் காலங்களில் வரும் சூழ்நிலை காணப்படுகின்றது. எனவே வன்னி தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவேண்டும்.

பாதீட்டில் வடக்குக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாரியளவான நிதி வன்னிக்கு வருமா? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு நிதி ஒதுக்க வேண்டாம் எனக் கூறவில்லை. ஒதுக்கப்படும் நிதி ஏனைய மாவட்டங்களுக்கும் வரவேண்டும் என்பதே எனது கோரிக்கை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி வன்னிக்கும் வரவேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன் என்றார். (ம-7)

## குறைந்த...

றொரு நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை இரத்துச் செய்யும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை என மின்சக்தி அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

குறைந்த விலையில் மின்சாரம் வழங்குவது குறித்த உடன்பாடொன்றை எட்டத் தவறியதால் அதானி நிறுவனம் திட்டத்திலிருந்து விலகியுள்ளது.

"உள்ளூர் நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலமாகவோ மக்கள் நியாயமான விலையில் மின்சாரத்தைப் பெறுவதை உறுதி செய்வதற்கான மாற்று வழிகளை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. மின்சாரக் கட்டணங்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

அதானியைவிட குறைந்த விலையில் மின்சாரம் வழங்க மற்றொரு நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஊடக...

ரையை இடிக்க வாரீர்..." எனப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பெயரில் போலி முகநூல்களில் பதிவுகள் பகிரப்பட்டன. குறித்த பதிவுகள் பகிரப்பட்டு சில மணிநேரங்களில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறித்த பதிவு போலியானது என தனது சமூக ஊடகங்களில் பதிவிட்டதுடன், ஊடக சந்திப்பொன்றினையும் நடத்தி அது போலியான விளம்பரங்கள் என அறிவித்திருந்தார்.

இந்நிலையில் கடந்த வாரம், "விகாரையை இடிக்க வாரீர்" எனப் போலி முகநூல்களில் விளம்பரப்படுத்தப் பட்ட விடயம் தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் பலாலிபொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில் ஊடகவியலாளரான பிரதீபன் மற்றும் [illegible] வாக்குமூலம் பெறுவதற்காக பலாலி பொலிஸ் நிலையத்தின் உப பொலிஸ் பிரிவுக்கு அழைத்த பொலிஸார், ஊடகவியலாளர்களை அங்கிருந்து உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பலாலி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இரண்டு ஊடகவியலாளர்களின் தொலைபேசிகளைப் பெற்று சோதனையிட்டதுடன், அவர்களிடம் சுமார் 06 மணி நேரம் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்ட பின்னர், குறித்த வழக்கு விசாரணைகள் தொடர்பில் தாம் அழைக்கும்போது பொலிஸ் நிலையத்திற்கு சமுகம் அளிக்க வேண்டும் எனும் நிபந்தனையுடன் இருவரையும் பொலிஸார் விடுவித்துள்ளனர். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.02.21
சீட்டிழுப்பு இலக்கம் 5754
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 9 9 9 3 1 2
அத சம்பத
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 9 3 1 2
சீட்டிழுப்பு இலக்கம் 0329
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1784
Y 14 21 32 57 Y
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance 12522
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

மெகா பவர்
திகதி 21/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2102
U 05 31 67 71 72
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

NLB ஜய JAYA
திகதி 2025.02.21
சீட்டிழுப்பு இலக்கம் 022
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள் U 1 8 1 4
தேசிய லொத்தர் சபை தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3996
சீட்டிழுப்பு திகதி | 21.02.2025
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 19 40 52 62
H
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.21
சீட்டிழுப்பு இலக்கம் 1063
வெற்றி இலக்கங்கள்
கன்னி 08 18 53 61 கன்னி
தன யோக இலக்கம் 96538 தேசிய லொத்தர் சபை 43

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.02.2025 வெற்றி வாரம் 462
ஆங்கில எழுத்து 0 மற்றும் வெற்றி இலக்கம் 9 2 1 3 7 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,599,451.20
68820
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2728 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 2025.02.21 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 17 30 55 79 ஆங்கில எழுத்து I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.87,682,305.60
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா
திகதி 21.02.2025 வெற்றி வாரம் 4889 வர்ணம்
வெற்றி இலக்கங்கள் 31 42 79 80 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,282,110.80
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 94433
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 627
சீட்டிழுப்பு திகதி 21.02.2025
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 | 12 | 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4440 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 21.02.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 10 45 56 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.13,527,925.60
219129
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 34 29 39 60 67
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1904
திகதி 21.02.2025 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.566,113,607.60
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2554
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி : 2025.02.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,642,484.00
வெற்றி இலக்கங்கள் 10 53 58 67 R
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 153601
DLB அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுரவின்...

வரவு செலவுத் திட்ட விவாதம் நேற்றுப் பாராளுமன்றில் இடம்பெற்றபோது உரையாற்றுகையிலேயே சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தியினர் தேர்தல் வாக்குறுதிகளில் கூறிய விடயங்கள் அனைத்தையும் மறந்து அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

நாட்டில் தற்போது சமூக செலவீனங்கள் அதிகரித்துள்ளது. மக்கள் தலையில் எல்லையற்ற சுமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, மக்கள் ஆணையை முற்றுமுழுதாக அரசாங்கம் காட்டிக் கொடுத்துள்ளதாகவும் மக்களை ஏமாற்றியுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய சஜித் பிரேமதாஸ, வரலாற்று ரீதியான மற்றுமொரு தவறு நடைபெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதியின் பாதையிலேயே தற்போதைய அரசாங்கமும் பயணிக்கின்றது.

அத்துடன் எதிர்வரும் 2028 ஆம் ஆண்டு கடனைச் செலுத்துவோம் எனப்படும் அரசாங்கத்தின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது எனவும் அதற்காகத் தாம் பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவம் ஒன்று மீண்டும் இடம்பெற இடமளிக்கப்போவதில்லை என்றும், 2028 ஆம் ஆண்டு கடனைச் செலுத்துவது என்றால் பொருளாதார வளர்ச்சி உயர்மட்டத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டினார். (ம-7)

## உரிய நேரம்...

தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் அண்மையில் நேரில் சென்று சந்தித்து கூட்டாகச் செயற்படுவதற்கான அழைப்புக் கடிதத்தை வழங்கியிருந்தனர்.

முன்னணியின் இந்த அழைப்பிற்கான பதில் கடிதமொன்றை தமிழரசு பதில் தலைவர் சிவஞானம் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

புதிய அரசியலமைப்பு மற்றும் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் பாராளுமன்றத்தில் கூட்டாகச் செயற்படுவது தொடர்பில் கலந்துரையாட விடுக்கப்பட்ட அழைப்புக் கடிதம் தொடர்பில் எமது மத்திய செயற்குழுவின் 16.02.2025 ஆம் திகதிய கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தற்போதைய அரசாங்கம் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பதாலும் அதற்கான முன்வரைவு எதையும் சமர்ப்பிக்காத நிலையிலும் நாம் அரசமைப்பு வரைவு பற்றி இப்போது விவாதிப்பது பொருத்தமானதாகக் காணப்படவில்லை என உணரப்பட்டது.

மேலும் எமது கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து வலியுறுத்திவரும் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடு இன்னும் வலுவுள்ளதாகவே பேணப்படும் என்பதும் தெரிவிக்கப்பட்டது. எனினும், அரசாங்கம் அதன் அரசமைப்பு உருவாக்க முன்மொழிவை துரிதமாக முன்வைக்க வேண்டும் என வலியுறுத்திக் கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ் விடயம் தொடர்பில் உரிய நேரம் வரும்போது இந்த விடயம் பற்றி நாம் கலந்துரையாடலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம் என அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வடக்கில்...

தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

கைத்தொழில்துறை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் விமல் ரத்நாயக்கா மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் Dr.ஹர்சன சூரியப்பெரும ஆகியோர் நேற்று பாராளுமன்றத்தில் மீன்பிடியியல் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர்களான றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி மற்றும் மருத்துவர் பவானந்தராஜா ஆகியோருடன் விசேட சந்திப்பு நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாணத்தில் கைத்தொழில்துறையை மேம்படுத்தும் வழிமுறைகள் மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

காங்கேசன்துறை, ஆனையிறவு, பரந்தன், மாங்குளம் மற்றும் ஒட்டுசுட்டான் உள்ளிட்ட பகுதிகளில் கைத்தொழில்துறை அபிவிருத்திக்குத் தேவையான நடைமுறைகள் குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, வரும்மார்ச் மாதம்7ஆம்திகதி மேற்குறித்த அமைச்சர்கள் குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். (ம-7)


முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.கிளைக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகைமைகள்

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Whatsapp: 077 756 3781

jenyjude77@yahoo.com

(3455)

STUDY IN UK

CANADA / AUSTRALIA / FRANCE / SWITZERLAND



IELTS

Mrs S.Mayuri (BA Eng.Lit) அவர்களின்

Life Skills A1/A2

திருமணமாகி UK செல்பவர்களுக்கானது

நேரில் வரும்போது எவ்வாயிலக வெளிநாடுகளுக்கு செல்பவர்களை பரவைவிட முடியும் (இலவச வழிகாட்டல்)

WEC COLLEGE

யாழ்ப்பாணம் ஆரியகுளம் (புதிய உயர்கல்லூரி வளாகம்)

சாவகச்சேரி சங்கத்தானை (இந்துக் கல்லூரி அருகே)

0779265447/ 0217200989

(872)

ஆங்கிலப் பயிற்சிநெறிகள் (சிறப்புச் சலுகைகளுடன்)

- IELTS / PTE
- Spoken English
- Business English

வார நாட்கள் & வார இறுதி நாட்களில்...

தொடர்புகளுக்கு: 077 628 4845

(C-2312)

உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்

- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மாவிட்டபுரம்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777

v2vacancies@gmail.com

(C-2313)

வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல குளிர்பான நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

காசாளர் (ஆண், பெண்)

தொடர்பு : மு.ப 09.00 - பி.ப 05.30

340C, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம்

077 711 1410

(3480)

முன்பள்ளி ஆசிரியருக்கான பதவி வெற்றிடம்

முன்பள்ளி ஆசிரியர் டிப்ளோமா பயிற்சி சான்றிதழ் பெற்ற எவரும் விண்ணப்பிக்க முடியும் கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் சுயவிபரக் கோவையினை 12.03.2025 ற்கு முன்னர் அனுப்பி வையுங்கள்

The principle, Door of Hope Pre School

No.74, Parkuli road, Thonikkal, Vavuniya.

(872)

ஊரெழுவில் 8 பரப்பு காணி விற்பனைக்கு

- ♦ பலாலி றோட்டில் இருந்து 300m - 400m தூரம்
- ♦ 2 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும்.
- ♦ காணியின் இரண்டு பக்க பாதையும் தார் வீதி
- ♦ நல்ல சூழல்
- ♦ செம்மண்.

077 617 2892

(3481)

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- பலாலி றோட் ஊரெழுப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300 m
- பலாலி புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300 m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல், வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

தொடர்புகளுக்கு :

077 623 4204, 076 755 8606

(3483)

Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 226/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 273/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சம்பா (உள்நாடு) | - 240/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 780/= | |
| 1Kg கடலை | - 425/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2820/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 220/= | Max 2Kg |
| 1Kg மல்லி | - 370/= | |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 985/= | ~~1050/=~~ |
| 330g டிகிரிமாறி பிஸ்கட் | - 275/= | ~~330/=~~ |
| 1 டசின் தீப்பெட்டி | - 170/= | ~~240/=~~ |
| 1 ocean மீன்ரின் | - 380/= | ~~580/=~~ |

400g Anchor 1000/= ~~1050/=~~



129/= ~~165/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

Happy Supermarket 0777 8080 30

(871)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org